-9 FEB 2000

பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை
ரூபா
5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 தை 26 புதன்கிழமை (09 - 02 - 2000) *VALAMPURI* ஒலி: 52

★ கொழும்பு பஸ் நிலையம் ★ மகாபொல சந்தி

## பஸ் குண்டுவெடிப்பில் இருவர் பலி 35பேர் காயம் 3பேர் கவலைக்கிடம்

கொழும்பில் நேற்று இரவு 10.40 மணியளவில் பஸ்ஸில் இடம்பெற்ற இரு வேறு குண்டு வெடிப்புச் சம்பவங்களில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர். 35 பேர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் தரித்து நின்ற பஸ்ஸில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 17 பொதுமக்கள் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் தற்போதுகொழும்பு தேசிய மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 3 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இக் குண்டு வெடிப்புத் தொடர்பாக புறக்கோட்டைப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை கொழும்பிலிருந்து நீர்கொழும்பிற்குச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று மாபொல சந்தியை அண்மித்த போது பஸ்ஸிலிருந்த குண்டு வெடித்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு பஸ் குண்டு வெடிப்புச் சம்பவம் பஸ்ஸிலிருந்து இளைஞர்ஏறி இறங்கினார்

### பஸ் நடத்துநர் சாட்சி

(கொழும்பு)

கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின்போது பஸ் நடத்துநரும் சிறிய காயங்களுக்குள்ளானார்.

இக்குண்டு வெடிப்புச் சம்பந்தமாக அவர் பொலிஸாருக்குத் தகவல் தருகையில், குண்டுவெடிப்புக்கு இலக்கான வெலிமடை பஸ் பஸ் நிலையத்தில் இருந்து இரவு 11. 40க்கு நகரவிருந்தது இதற்குள் 17 வயது மதிக்கதக்க இளைஞர் ஒருவர் பஸ்ஸில் ஏறி இறங்குவதைத் பார்த்தேன் சாரதி தேநீர் குடிக்க கடைக்கு சென்றுவிட்டார். நானும் நித்திரைத்தூக்கத்துடன் இருந்தேன் இளைஞர் இறங்கிய சிறிது நேரத்தில் மின்னல் மின்னியபடி குண்டு வெடித்தது தான் தெரியும்.

இந்த பஸ்ஸுக்கு அருகாமையில் திருமலைக்குச் செல்ல தரித்திருந்த பஸ் வண்டியும் பலத்த சேதத்திற்குள்ளானது என்பது குறிப்பிடத்தக்கது.

★ புதிய அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம்

# ஜனாதிபதி - தமிழ்க்கட்சிகள் சந்திப்பு

# சுமுகமான முறையில் நடைபெற்றது

## தமிழ்க் கட்சிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

**இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமான அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கா தமிழ் அரசியல் கட்சிப் பிரதி நிதிகளைச் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தினார்.**

**இரு தரப்புப் பேச்சுக்கள் யாவும் சுமுகமான முறையில் நடைபெற்றதென தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்தனர்**

1997ஒக்டோபர் மாதம் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் சமர்ப்பித்திருந்த தீர்வுத்திட்டத்தின் முக்கிய மாற்றங்களில் ஆறு விடயங்கள் குறித்தே நேற்றைய பேச்சுக்கள் இடம்பெற்றன.

அலரிமாளிகையில் நடைபெற்ற இச்சந்திப்பில் பொ. ஐ. முன்னணி அரசைச் சேர்ந்த கட்சி உறுப்பினர்களுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி ஈ. பி. டி. பி, புளொட், ரெலோ ஆகிய தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

அரசாங்கம் முன்னர் முன்வைத்த திட்ட யோசனைகளில் சிலமாற்றங்கள் செய்யப்பட்டே தமிழ்க்கட்சிகளி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தையில் பங்குபற்றிய அரசியல் கட்சிப் பிரதிநிதிகள்

(கொழும்பு)

நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற புதிய அரசியல் அமைப்பு சீர்திருத்தம் சம்பந்தமாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது பங்குபற்றிய அரசியல் கட்சி உறுப்பினர்களின் பெயர் விபரம் வருமாறு;

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் அமைச்சர்களான ஜீ. எல். பீரிஸ், லக்ஸ்மன் கதிர்காமர், இந்திக குணவர்த்தன, எஸ். பி. திஸநாயக்கா ஆகியோரும் தமிழர் விடு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல்பயணிகள் சனிமுதல் பதிவு

(திருகோணமலை)

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் வரவுள்ள லங்கா முடித்த கப்பலில் பயணம்செய்வோரைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செட்டிகுளத்தில் கிளைமோர்

## 3 படையினர் பலி 10 பேர் காயம்

(வவுனியா)

இராணுவத்தினரின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளசெட்டிகுளம் மதவாச்சி வீதியில் நோயாங்குளம் என்னும் இடத்தில் காலை 11 மணியளவில் இடம் பெற்ற கிளைமோர்த் தாக்குதலில்இராணுவத்தினர் பயணம் செய்த வாகனம் சிக்கியதில் மூன்று படையினர் கொல்லப்பட்டு, 10 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இராணுவத்தினர் அனுராதபுரம் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரெழு "குணம்" மீதான விசாரணை சட்டமா அதிபர் ஆலோசனைபெறப்படும்

ஊரெழுவைச் சேர்ந்த குணம்என்பவரை 10-12-99ல் ஆயுதங்களுடன் கைதுசெய்தமைதொடர்பாகபுலனாய்வு செய்த உத்தியோகத்தர் ஒருவரும் அவருடன் இருந்த ஒருவரும் நேற்று அறிக்கைஒன்றை நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தனர்,

அந்த அறிக்கை மீதான விசாரணைகளின் போது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். அரசியல் கட்சியைச் சேர்ந்த இருவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள அரசியல் கட்சியில் இருந்து தாமாக விலகி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் சரணடைந்த இருவர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

திருகோணமலையைச் சேர்ந்த சின்னையா, பாலன் [23 வயது], பாக்கியநாதன்

[6 ஆம் பக்கம் பார்க்க]

**வன்னிப் பயணிகள்**

## மூன்று வார இடைவெளிக்குப்பின் 1000பேர் நேற்று வவுனியா வந்தனர்

(வவுனியா)

வன்னியில் இருந்து மூன்று வாரகால இடைவெளியின் பின் நேற்றிரவு 8-30மணிக்கு சுமார் ஆயிரம் பயணிகள் வவுனியா வந்து சேர்ந்தனர்,

இந்தப் பயணிகள் பிராமணாளங்குளம் வீதி வழியாக வவுனியா வந்து சேர்ந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ( அன்பு மாணவச் செல்வங்களே! )

வலம்புரி தினந்தோறும் கல்விக்கு வழங்கிவரும் முக்கியத்துவம் குறித்து நீங்கள் அனுப்பும் பாராட்டுச் செய்திகள் வந்து குவிந்த வண்ணமுள்ளது

உங்கள் பாராட்டுச் செய்திகளுக்கு எமது நன்றிகள். வலம்புரியின் கல்விப்பணியில் புதன்கிழமை 5ம்- தர புலமைப்பரீட்சை வினாக்களும் விடைகளும் வெளிவருவதும் நீங்கள் அறிந்ததே. அடுத்தபடியாக க.பொ.த.(உயர்தரம்), க.பொ.த.(சாதாரணதரம்)ஆகிய பாடங்களுக்குரிய வினாக்களையும் விடைகளையும் வலம்புரி மிக விரைவில் உங்களுக்குத் தரவுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

சகலவிதமான ஓவிய வேலைகள், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள், பாட சாலைச் சின்னம், கீற்றேக் ஆகியவற்றை செய்திட S. S யசோதரன் ஆட்ஸ் 185, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். (கி/ 030)

### மணமக்கள் தேவையா?

கவலை வேண்டாம், பதிவு இலவசம் சகல சமயத்திலும் சகல தரத்திலும் மணமக்களை பெற்றுக் கொள்ள. நம்பிக்கையுடன் தொடர்பு. மோகனராணி ஏஜன்ட் இல: 1051 கே. கே. எஸ் றோட் நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்.

(00151)


## மைதானம் கையளிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட பொது விளையாட்டு மைதானம், கையளிக்கும் நிகழ்வு அண்மையில் அச்சுவேலி பிரதேச சபை உபகாரியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

வலிகிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் எஸ். குகதாசன் ஐக்கிய விளையாட்டுக் கழக அங்கத்தினரிடையே கையளிக்கும் இந்நிகழ்வில் ஈ. பி. டி. பி அமைப்பின் கோப்பாய் பிரிவு அமைப்பாளர் ரவி, வலிகிழக்குப் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-57)

### இலங்கையின் இனப்பிரச்சினைக்கு

# அரசியல் யாப்பு சீர்திருத்தம் நிரந்தர தீர்வைக் கொண்டுவராது

(யாழ்ப்பாணம்)

கடந்த எண்பது வருடங்களாக வளர்ந்து வந்துள்ள இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்கு வெறுமனே அரசியல் யாப்பு சீர்திருத்தம் மட்டும் நிரந்தர அரசியல் தீர்வினை கொண்டுவர முடியாது.

இவ்வாறு வட-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் நிரந்தர சமாதானத்தையும், உண்மையான ஜனநாயத்தையும், அரசியல் பொருளாதார அபிவிருத்தியையும் கட்டியெழுப்புவதற்கு அவசியமான அடித்தளமாக அமைவது அரசியல் யாப்பு சீர்திருத்தமே.

இருபத்தோராம் நூற்றாண்டு விடிந்துள்ள இவ்வேளையில், இலங்கையில் நிலவும் அரசியல் சூழ்நிலை மிகவும் உற்சாகமளிப்பதாகவும், நம்பிக்கை ஊட்டுவதாகவும் உள்ளது. ஜனாதிபதி அவர்களின் துரிதமான அரசியல் நடவடிக்கைகள், எதிர்க் கட்சித் தலைவர் உறுதியளித்துள்ள ஆதரவு மற்றும் இவ்விடயத்தில் சர்வதேச சமூகம் காட்டி வருகின்ற அக்கறை ஆகியன அரசியற் தீர்வு மற்றும் சமாதானம் ஆகியவற்றை நோக்கி நாட்டையும் மக்களையும் மீண்டும் உற்சாகம் கொள்ள வைத்துள்ளன.

1997 ல் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்ட யோசனைகளில் பாரதூரமான குறைபாடுகள் உள்ளன. சேர்க்கப்படவேண்டிய பிரதானமான பல விடயங்கள் அதில் சேர்க்கப்பட்டுள்ளன. அதேபோலவே, சேர்க்கப்படக்கூடாத சில விடயங்கள் அநாவசியமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இவை என்னாலும் ஏனைய பலராலும் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அரசாங்கம் அதனது புதிய அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு முன்னரே தேவையான திருத்தங்களை மேற்கொள்ளும் என நான் நம்புகிறேன்.

ஓர் ஒளிமயமான அரசியல் விடிவினை நோக்கியபடி சொல்லாணாத் துயரங்களையும் கஷ்டங்களையும் அநுபவித்து வந்துள்ள தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தும் வகையிலேயே புதிய அரசியல் யாப்பு தயாரிக்கப்படும் என்றே நான் ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

நியாயமான தமிழ் அரசியல் சக்திகளின் கருத்துக்களுக்கும் ஆலோசனைகளுக்கும் ஜனாதிபதி அவர்களும் மற்றும் பொதுஜன முன்னணியின் தலைவர்களும் மிகுந்த கவனம் செலுத்துவார்கள் என நான் நம்புகிறேன். ஏனெனில் அத்தகைய சக்திகளே கடைசியில் அரசியல் யாப்பினை தமிழ் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்புக்கு உள்ளாவார்கள். நிரந்தர சமாதானமும், அரசியல் தீர்வும் இந்தத் தமிழ்க் கட்சிகள் தங்கள் சொந்த மக்களின் நம்பிக்கையை எந்தளவு தூரம் வென்றெடுக்கின்றன என்பதிலேயே தங்கியுள்ளது. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

### புத்தாயிரமாம் ஆண்டில்

## திருமறைக் கலாமன்றத்தின் கலைப் பயணம் ஆரம்பமாகின்றது

(யாழ்ப்பாணம்)

புத்தாயிரம் ஆண்டின் இனிய புலர்வில் திருமறைக் கலா மன்றத்தின் ''சாந்தி'' நடனக் குழுவினர், மன்ற இயக்குநர் கலைத்தூது நீ. மரியசேவியர் தலைமையில் ஐரோப்பிய நாடுகளுக்கான கலைப்பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இன, மத, மொழி பேதமின்றி கலைகளினால் அனைவரையும் அணைத்து மனிதத்தை தேடும்பணியினை ஆற்றி வரும் இம் மன்றமானது வருடாவருடம் புலம்பெயர்ந்த ஐரோப்பிய உறவுகளுடன் கலைவழியில் சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றது.

இம்மாதத் தொடக்கத்தில் கலைப்பாலம்-2000 நிகழ்வினூடாகபுறப்பட்ட நடனக் குழுவினர், மாத இறுதியில் நாடுதிரும்பி கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் இக்கலை நிகழ்ச்சிகளை மேற்கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-9)

## புதிய நிறுவனம் உதயம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகர மக்கள் நலன்காக்கும் அமைப்பு எனும் பெயரில் ஒரு புதிய நிறுவனம் இன்று சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

நகரசபை எல்லைக்குள் வாழ்கின்ற மக்களின் ஆதார வரி, சுகாதாரம் மின்சாரம் கல்வி மற்றும் அத்தியாவசிய தேவைகள் பற்றி இவ்வமைப்பு கருத்தில் கொண்டு செயற்படவுள்ளதாக இதன் அமைப்பாளர் எம். விவேகானந்தன் தெரிவித்துள்ளார். (க77)

## இராசி பலன்

09. 02. 2000 புதன்கிழமை
(தமிழுக்கு தை 26)

சதுர்த்தி இரவு 8.25 வரை: உத்தரட்டாதி நடுநசி 1..39 வரை, சித்தயோகம் இராகு காலம் பகல் 1.08 முதல் 2.33 வரை, சுபநேரம் மாலை 5.34 முதல் 7.04 வரை, சதுர்த்தி விரதம்.

**மேடம்:** தொழில் போராட்டம், தப்பபிப்பிராயம் மனச்சுமை.

**இடபம்:** அதிகாரிகள் அறிவுரை, தொழில் சிறப்பு, பணவரவு.

**மிதுனம்:** இனியகாட்சி, குடும்ப மகிழ்ச்சி, விருந்துண்ணல்.

**கடகம்:** கண்கலங்குதல், உடல் நலக்குறைவு, கணவர் கவலை.

**சிங்கம்:** எதிரிகள் பயம், தொழில் நஷ்டம், அகால உணவு.

**கன்னி:** மேலோர் உதவி, விவாகச் சிறப்பு, பெற்றோர் மகிழ்ச்சி.

**துலாம்:** துணிகர முயற்சி, காரிய சித்தி, கடித வெற்றி.

**விருச்சிகம்:** மனப்பதற்றம், அதிகாரிகள் சினம், அலைச்சல்.

**தனுசு:** தந்திரோபாயம், மாமனார் வெறுப்பு, சபல புத்தி.

**மகரம்:** சுப காரியச் செலவு, எதிர்பாராத சிந்தனை, குழந்தைப்பாசம்.

**கும்பம்:** குடும்ப விவகாரம், அதிக கவலை. குமுறும் உள்ளம்.

**மீனம்:** மனைவி பெருமை, பிறர் உதவி, காரியச் சிறப்பு.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா


ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
ரகுமான், விஜயசாந்தி நடித்த
சூர்யோதயம்
10. 30, 2. 30 (ப.நே)ர்
மகளிருக்கு இடமுண்டு
(00115)

# வாழ்த்துகின்றோம்

புதுக்கடை திறப்பு விழா
அகிலன் சிகை அலங்கரிப்பு நிலையம்
இன்று புதன்கிழமை
நேரம்: 10.30 - 11.00
எங்கள் நல்வாழ்த்துக்கள்

செயலாளர்
ஸ்ரீ ராமகிருஷ்ண
சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.
(கி/70)

# பகிரங்க அறிவித்தல்

எமது சங்கத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் விசேட வைப்புக் கணக்குகள் ஒன்றில் 1987 இல் முறை கேடு நடந்ததாக அவ்வைப்பாளர் முறையீடு செய்தமையால் அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூட்டுறவுத் திணைக்களம் சங்கத்தை வேண்டிக் கொண்டுள்ளது. அதன் உண்மைத் தன்மையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு பொதுச் சபையினதும் இயக்குநர் சபையினதும் தீர்மானப்படி திரு. வ. கந்தசாமி ஓய்வு பெற்ற அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை. அவர்கள் தலைமையில் ஒன்பது பேர் கொண்ட ஆய்வுக் குழு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பிட்ட வைப்புக் கணக்குத் தொடர்பாகத் தகவலோ, சாட்சியமோ அளிக்க விரும்புபவர்கள் 13.02.2000 (ஞாயிறு) மு. ப. 10.00 மணிக்கு சங்கக் காரியாலய மண்டபத்தில் மேற்படி குழுவைச் சந்திக்குமாறு கேட்கப்படுகின்றார்கள்.

எழுத்து மூலமான தகவல்கள் 13.02.2000க்கு முன் கிடைக்கப்பெற வேண்டும்.

தலைவர்
கட். நெல். ப. நோ. கூ. சங்கம்,
கரவெட்டி.
09.02.2000 (கி/69)

உ
சிவமயம்

# திருமண அழைப்பிதழ்



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் தைத் திங்கள் 27 ஆம் நாள்(10-02-2000) வியாழக்கிழமை காலை 7.29 மணி முதல் 9.05 மணிவரை அமைந்துள்ள கும்பலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில்

எமது கனிஷ்ட புதல்வன்
திருநிறைச் செல்வன்
ஸ்ரீகரன் (B. Com)
அவர்களுக்கும்

எமது ஏகபுதல்வி
திருநிறைச் செல்வி
தயராஜினி
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு கொழும்பு குணசிங்கபுர பிரதீபா மண்டபத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி த. பரராசசிங்கம்
15, 9 வதுலேன், வாசல றோட்,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு 13, Tel: 435329

திருமதி ம. சௌந்தரராசா
சௌ. தயாபரன் (சகோதரன்)
7-1/10, உம்பிச்சிபிளேஸ்,
கொழும்பு 13.

(இரு வீட்டார் அழைப்பு) (கி/68)

### அமெரிக்க அதிபரின் வருகை

## நாசகார செயல்களில் ஈடுபட ஜம்மு - காஷ்மீர் தீவிரவாதிகள் முயற்சி

(புதுடில்லி)

அமெரிக்க அதிபரின் வருகையின் போது, இந்தியாவில் நாசகார வேலைகளில் ஈடுபட ஜம்முகாஷ்மீர் தீவிரவாத அமைப்புக்கள் தயாராகி வருவதாக தெரிய வருகிறது.

அடுத்த மாதம் இந்தியப் பயணம் மேற்கொள்ளவுள்ள அமெரிக்க அதிபர் பில் கிளிங்டன் வருகையின் போது,

இந்தியாவின் காஷ்மீர் பகுதியில் தாக்குதல்களைத் தீவிரப்படுத்துமாறு ஜம்மு காஷ்மீரில்உள்ளஅனைத்துத் தீவிரவாதக் குழுக்களுக்கும் பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ. அமைப்பு உத்தரவிட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அமெரிக்க அதிபரின் இந்திய விஜயத்தின் போது, அவரது பாதுகாப்பு மற்றும் இதர விடயங்கள் தொடர்பான முன்னேற்பாடுகளைக் கவனிக்கும் பொருட்டு இந்திய வெளியுறவுச் செயலர் அமெரிக்கா பயணமாகவுள்ளதும் ஏற்கனவே தெரிந்ததே (க-9)

## பின்லாந்தின் புதிய அதிபராக முதன்முதலாக பெண் ஒருவர் தெரிவு

(இலண்டன்)

அண்மையில் நடைபெற்ற பின்லாந்து அதிபர் தேர்தலில் 56வயதுடைய தாரிஜா ஹலாமா என்ற பெண்ணொருவர் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பின்லாந்து அரசியல் வரலாற்றில் இது ஒரு முக்கிய திருப்பு முனையாகக் கருதப்படுகிறது.

பின்லாந்து. நாட்டில் பெண் ஒருவர் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

வெளிநாட்டு அமைச்சராக இருந்து வந்த தாரிஜா ஹலாமா தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட ஆண் வேட்பாளரை மிகக்குறைந்த வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (க-9)

### அமெரிக்க கடற்படையில்

## கைப்பற்றப்பட்ட ரஷ்யக்கப்பலை பொறுப்பேற்க ஓமான் இணக்கம்

(மஸ்கற்)

வளைகுடா கடற்பகுதியில் அமெரிக்க கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட ரஷ்யாவின் எண்ணெய்க் கப்பலை ஏற்றுக் கொள்ள ஓமான் நாடு இணக்கம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் தடையையும் மீறி ஈராக்கிய எண்ணெயை இந்த ரஷ்ய கப்பல் ஏற்றிச் சென்றது என்ற சந்தேகத்தின் பேரில் அமெரிக்கா இந்தக் கப்பலைக் கைப்பற்றியிருந்தது.

கப்பலில் உள்ள எண்ணெய் எந்த நாட்டைச் சேர்ந்தது என்பதை அறியும் பொருட்டு எண்ணெய் மாதிரி எடுக்கப்பட்டு பரிசோதித்த வேளையில்ஈராக்கினுடையது என கண்டுபிடிக்கப்பட்டது.

இச்சம்பவத்தைஅமெரிக்கா தலைமையிலான பன்னாட்டு இடைநிறுத்தப்படைஅதிகாரி உறுதிப்படுத்தி இருக்கிறார்.

இதேவேளை எண்ணெய்க் கப்பலை விடுவிக்க வேண்டும் என ரஷ்யா கேட்டிருந்தாலும் தனது கப்பலை அமெரிக்கா தடுத்து நிறுத்தியமை தொடர்பாக இற்றை வரை எதிர்க் கண்டனங்கள் எதனையும் ரஷ்யா தெரிவிக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-9)

### ஆப்கன் விமானக் கடத்தல்

## பயணம் செய்த 155 பேரையும் விடுவிக்கவும் பிரிட்டிஷ் அரசை தலிபான் கேட்டுள்ளது

தலிபான் எதிர்ப்புக் கூட்டணியின் ஆறு ஆயுததாரிகளால் கடத்தப்பட்டு லண்டனுக்கு வெளியே ரென்னிஸ் விமான நிலையத்தில் தரையிறக்கி வைக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தான் விமானத்தையும் அதில் பயணம்செய்த 155 பயணிகளையும்விடுவிக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரிட்டிஷ் அரசை தலிபான் கேட்டுக்கொண்டுள்ளது.

இதே வேளை கடத்தல்காரர்களுடன் பேச்சுக்களை நடத்தவோ, பாதுகாப்பில் உள்ள இடது சாரி முக்கியஸ்தரை விடுவிக்க வேண்டுமென்ற எதிரணியின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளவோ தலிபான் தயாராக இல்லை என அதன் தலைவர் முல்லா முகமத் ஒபார் தெரிவித்துள்ளார்.

இதனிடையே இச் சம்பவம் தொடர்பாக ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் நிலைப்பாட்டை அறியவும் இஸ்லாமபாத்திலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் ஊடாக தலிபானின் நிலைப்பாட்டை அறியவும் பிரிட்டிஷ் அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

எனினும் கடத்தல் சம்பவத்தை எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவருவது பற்றி பிரிட்டிஷ் அரசே இறுதி முடிவை எடுக்கும் என அந்த நாட்டின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ந-7)

# அங்கோலா அரசாங்கத்தினால் பொதுமக்கள் 24 பேர் படுகொலை

(அங்கோலா)

அங்கோலா நாட்டு அரசு நமிபியா நாட்டு எல்லையில் உள்ள தான்ரா கிளாரா என்ற ஊரில் குறைந்தபட்சம் 24 பொதுமக்களைப் படுகொலை செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பல பொதுமக்களைக் கொலைசெய்த அரச படைகள் 30 க்கு மேற்பட்ட அப்பாவி மக்களை படுகாயப்படுத்தி உள்ளதாகவும் தெரிய வருகிறது.

மேற்படி பகுதிக்குள் நுழைந்த அங்கோலா நாட்டு அரச படைகள் துப்பாக்கிகள் வெட்டுக்கத்திகள் கொண்டு அகப்பட்டவர்களை எல்லாம் தாக்கியதாகவும், வீடுகளிற் புகுந்து கொள்ளையில்ஈடுபட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொலை செய்யப்பட்டவர்கள் 24 பேர் மட்டுமே என்று கூறப்படுகின்ற போதிலும் இதனை உறுதிசெய்ய முடியாதுள்ளதாகவும் தொகை இன்னமும் அதிகரிக்கக்கூடும் எனவும் நம்பப்படுகிறது.

இதேவேளை —

இந்தச் சம்பவங்களுக்கும் தனது படைகளுக்கும் தொடர்புகள்ஏதும் கிடையாதென மறுத்துள்ளஅங்கோலா நாட்டு அரசு அங்குள்ள கிளர்ச்சி அமைப்பான ஜெனஷாவே இந்தத் தாக்குதல்களைப் புரிந்திருக்கிறது எனத் திட்டவட்டமாகக் கூறிவருவது குறிப்பிடத்தக்கது. [க-9]

## பாக். இராணுவ உபகரணங்களை கடத்த முற்பட்ட பிரிட்டிஷ் பிரஜை கைது!

(நியூயோர்க்)

பாகிஸ்தானுக்கு இராணுவ உபகரணங்களை கடத்த முயன்ற பிரிட்டிஷ் பிரஜை ஒருவர் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடத்தல் சம்பந்தமாக கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவல்களை வைத்தே இவர் கைது செய்யப்பட்டதாக புலன் விசாரணைப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

பிரஸ்தாப நபர் இது போன்ற பல கடத்தல் நடவடிக்கைகளில் நீண்டகாலமாக ஈடுபட்டுவந்தமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகவும் புலன் விசாரணைப் பகுதியினர் மேலும் தெரிவித்துள்ளனர். (க)

## தேர்தல் பிரச்சார அச்சுறுத்தல்களுக்கு தமிழக முதல்வரே பொறுப்பேற்க வேண்டும்

(புதுடில்லி)

தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடும் போது ஏற்படுகின்ற அச்சுறுத்தல்களுக்கு தமிழக முதல்வர் கருணாநிதியே பொறுப்பேற்க வேண்டும் என அ.இ.அ.தி.மு.க. பொதுச்செயலர் செல்வி ஜெயலலிதா எச்சரித்திருக்கிறார்.

வரவிருக்கின்ற இடைத் தேர்தல்களை எதிர்கொள்ளுமுகமாக பிரச்சார சுற்றுப் பயணத்தில் தான் ஈடுபடப் போவதாகவும்.

மாணவர் என்ற போர்வையில் சிலர் தாக்குதல் நடாத்தத் திட்டமிட்டிருப்பதை தான் அறிவதாகவும் அப்படி ஏதாவது நடந்தால் அதற்கு முதல்வர் கருணாநிதியே பொறுப்பேற்க வேண்டும் எனவும் ஜெயலலிதா எச்சரித்துள்ளார். (க-9)

# ஜம்மு-காஷ்மீரை மீட்கும் வரை நாம் ஓயப்போவது கிடையாது

### இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவிப்பு

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீர் முழுவதுமே இந்தியாவுடன் இணைந்து விட்ட பகுதி. அதனை பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கும் வரை ஓய மாட்டோம் என இந்தியப் பிரதம மந்திரி அடல் பிஹாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜம்மு காஷ்மீர் தனது சொந்த விருப்பின் பெயரிலேயே இந்தியாவுடன் இணைந்தது. இனிமேல் அதனை பாகிஸ்தானிடம் ஒப்படைக்க முடியாது.

இந்தியா அனைவருக்கும் உரியது. முஸ்லிம் பெரும்பான்மை வாதம் என்ற பேச்சுக்கே இடமில்லை. பாகிஸ்தானின் மொத்த மக்கள் தொகையை விட அதிகமான மக்கள் தொகை இந்தியாவிலேயே உள்ளது.

பாகிஸ்தானுடன் அமைதியான உறவுகளையே இந்தியா பேண விரும்புகின்றது. ஆனால் ஜம்மு கஷ்மீரை விட்டுக் கொடுக்க விரும்பவில்லை.

பாகிஸ்தான் முதலில் அணுவாயுதத்தை பயன்படுத்த மாட்டோம் என அறிவிக்கட்டும் அப்படி அறிவித்தால் நாமும் முதலில் அணுவாயுதத்தை பயன்படுத்த மாட்டோம். ஆனால் எமக்கு எதிராக மற்றவர்கள் அணுவாயுதத்தை பாவிக்கும்பொழுது நாம் சும்மா இருக்க மாட்டோம் என வாஜ்பாய் எச்சரிக்கை விடுத்தார்.

பிரதமர் வாஜ்பாயின் அறிவிப்பைத் தொடர்ந்து, இந்தியாவிற்கு எதிராக தாம் முதலில் அணு ஆயுதத்தைப் பயன்படுத்த மாட்டோம்என பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் முஷாரப் தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

**உலக வலம்**

### கோலான் குன்றுகளிலிருந்து

## இஸ்ரேலிய படை வாபஸ்பெறுவதுகுறித்து சிரிய - இஸ்ரேல் தலைவர்கள் பேச்சு

(லண்டன்)

சிரியாவின் கோலான்குன்றுகளில் இருந்து இஸ்ரேல் படைகள் வாபஸ் வாங்குவதில் ஏற்பட்டுள்ள தாமத நிலை குறித்து எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபராக்குடன் பாலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் பேச்சுக்களை நடாத்தி உள்ளதாக தெரியவருகிறது.

இஸ்ரேல் பிரதமர் எகிட் பராக் இது குறித்து நடாத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்தமைக்கான காரணங்கள் பற்றி இப்பேச்சில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன் இஸ்ரேல் கையெழுத்திட்ட உடன்பாடுகளை அமுல் படுத்த மறுத்து வருவதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் பேச்சுவார்த்தையின் போது விளக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை, 1967 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னதாக இருந்தவாறு இஸ்ரேலிய படைகள் கோலான் குன்றுகளின் படைகள் வாபஸ் வாங்கப்படவேண்டும் எனும் சிரிய நிலைப்பாட்டிற்கு எகிப்து தனது பூரண ஆதரவை வழங்கி இருந்ததும்.

45 மாதகால இடைவெளியின் பின் கடந்த டிசம்பர் மாதத்தில் அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள், பலத்த இழுபறியின் மத்தியில் தற்போது ஸ்தம்பிதமடைந்திருப்பதும் தெரிந்ததே. (க-9)

### கொசோவா பகுதியில்

## பன்னாட்டு படையணிகளுக்கு இராணுவ பயிற்சி வழங்கப்படவுள்ளது

(லண்டன்)

கொசோவா பகுதியில் நிலை கொண்டுள்ள நேட்டோ தலைமையிலான பன்னாட்டுப் படையணிகள் அங்கு ராணுவப் பயிற்சியினை மேற்கொள்ளவுள்ளதாக தெரிய வருகிறது.

கொசோவா பகுதியில் ஏற்படவுள்ள எந்தவொரு அவசரமான சூழ் நிலையையும் சமாளிக்கும் திறன் அங்கு நிறுத்தப்பட்டுள்ள பன்னாட்டுப் படைகளுக்குண்டு என்பதை அங்குள்ள சேர்பிய மற்றும் அல்பேனிய மக்களுக்கு நிரூபித்துக் காட்டுமுகமாகவே மேற்படி முயற்சி ஆரம்பிக்கப்படவுள்ளதாக நேட்டோ அமைப்பு அறிவித்துள்ளது,

அத்துடன் அடுத்துவரும் நாட்களில் இப் பயிற்சிகள் தொடங்கவுள்ளதாகவும்.

இப்பயிற்சிகள் மூலம் இராணுவ படையணிகளின் வலிமையையும் கோசோவாவில் அமைதியை ஏற்படுத்துவதற்கு இங்கு வாழும் இரு இன மக்களுக்கும் குந்தகம் விளைவிக்கக் கூடாது. என்னும் இரண்டையும் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் நேட்டோ அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை;

கொசோவாவில் அண்மையில் வெடித்த வன் முறைகளில் அல்பேர்னிய துருக்கிய இன மக்கள் பலர் கொல்லப்பட்டதும் அல்பேர்னியர்பலர் கொசோவாவை விட்டு வெளியேறி வருவதையும் தொடர்ந்து.

நேட்டோ கூட்டமைப்பில் உள்ள ஐரோப்பிய நாடுகள் ஐரோப்பாக் கண்டத்தின் பாதுகாப்பை உறுதி செய்ய எதிர் காலத்தில் கூடுதல் பங்காற்ற வேண்டும் என நேட்டோ அமைப்பின் தலைமைச் செயலாளர் அறைகூவல் விடுத்திருப்பது தெரிந்ததே. (க-9)

# செய்தித் துளிகள்

## செஞ். சங்கம் இடம் மாற்றம்

(மந்திகை)

பருத்தித்துறை கந்தஉடையார் ஒழுங்கையில் அமைந்துள்ள பழைய தும்புத் தொழிற்சாலையில் இதுவரை இயங்கிவந்த இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கபருத்தித்துறை பிரிவு அதே வீதியில் உள்ள, வைத்தியர்தேவராஜா நக்கீரன் என்பவரது வீட்டிற்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (க-23)

## முருகன் புகழ் திரட்சிப்பணம் ஆச்சிரமத்திற்கு

(தென்மராட்சி)

யாழ்பாணம் இந்துசமயப் பேரவையின் கௌரவ செயலாளரான .எஸ்.சக்திகிரீவனால் யாக்கப்பட்டு அண்மையில் தொண்டமனாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெளியீட்டுவிழா செய்யப்பட்ட 'முருகன்' புகழ் நூலின் அன்றைய திரட்சிப் பணம் முழுவதையும் நூலாசிரியர் ஆச்சிரமத்தின் பணிகளுக்காக அன்பளிப்புச் செய்துள்ளார். (க-77)

## கந்தபுராண படனம் ஆரம்பம்

(புலோலி)

புலோலி வெள்ளெருவை நின்ற தாய் ஆலய கந்த புராணப்படனம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

அடுத்த மாதம் 24 ஆம் திகதி வள்ளியம்மை திருமணப் படலமும் 25 ஆம் திகதி அன்னதானமும் 26 ஆம் திகதி வைரவர் மடையும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-52)

## அங்குரார்ப்பண வைபவம்

(மண்கும்பான்)

மண்கும்பான் ஈ.ரி.எம் பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பண வைபவம் கடந்த 6 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு பாடசாலை அதிபர் க. குமரேஸ்வரநாதன் தலைமையில் பாடசாலையின் தற்காலிக கட்டடத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கிராம சேவையாளர் இரா. யோகேஸ்வரன் பழைய மாணவர்கள் பெற்றோர் நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர். (க-83)

## அதிபர் இடம் மாற்றம்

யாழ். கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய அதிபராக கடந்த ஏழுவருடங்களாகப் பணி புரிந்த அதிபர் சி.ஆ. சோதிலிங்கம் சுயவிருப்பத்தின் பேரில் கொழும்பு மாவட்டத்திற்கு மாறிச் சென்றுள்ளார். (க)

## கட்டாக்காலி மாடுகளின் பெருக்கம்

(மண்கும்பான்)

வேலணைப் பகுதியில் கட்டாக்காலி மாடுகளின் தொகை வெகுவேகமாக அதிகரித்து வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இப் பகுதியில் ஏற்பட்ட இடப் பெயர்வை யடுத்தே கவனிப்பார் அற்ற நிலையில் மாடுகள் அலைந்து திரிவதாக தெரிவிக்கப்படுகிறது. (க-83)

## கற்பித்தல் உபகரண கண்காட்சி

(நெடுந்தீவு)

தீவக வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கான ஆரம்பக்கல்வி கற்பித்தல் உபகரணக் கண்காட்சிகடந்த 5 ஆம் திகதி தீவக வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். செல்வரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

இக்கண்காட்சிக்கு பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் கலந்து கொண்டார். (க-82)

## அதிபர்கள் நியமனம்

(மந்திகை)

வடமராட்சி கல்விவலய பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பருத்தித்துறைஹாட்லிக் கல்லூரி அதிபராக இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த மு. ஸ்ரீபதியும்.

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கு திருமதி. வி.சுகுமாரனும் நியமிக்கப் பட்டுள்ளனர். (க-23)

## விண்ணப்பங்கள் கோரல்

(அரியாலை)

அரச தொழிற்துறைத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்டு வரும் தச்சுத் தொழிற் பயிற்சி நிலையத்தில் தச்சுத் தொழிற் பயிற்சி பெற விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சியைப் பெற விரும்புவோர் சுய விபரங்களடங்கிய விண்ணப்பங்களை பிரதேச செயலர் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி யாழ். பிரதேசசெயலர் திரு. பா.செந்தில் நந்தனன்அவர்கள் தெரிவித்துள்ளார். (க)

## பிரதேசதலைவர் நியமனம்

(மந்திகை)

வடமராட்சி தெற்கு மேற்குபிரதேசசபைத் தலைவராக ஈ.பி.டி.பி அமைப்பின் கரவெட்டி அமைப்பாளர் வல்லிபுரம் நடராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் இக்கட்சியின் தலைவராக கடமை புரிந்த செல்லையா சுந்தரமூர்த்தி பதவி விலகியதை அடுத்து அவரது இடத்திற்கே இவர் நியமனம் பெற்றுள்ளார். (க-23)

## அடிக்கல் நாட்டும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

சாவற்காட்டுப் பகுதியில், கடற் தொழிலாளர் வீட்டுத்திட்டத்தின் கீழ், 90 வீடுகள் அமைக்கும் திட்ட அடிக்கல் நாட்டும் வைபவம் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாவட்டச் செயலகத்தின் சார்பில் எஸ். மகாலிங்கம் வலி தென்மேற்கு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஏ. மகாலிங்கம் உட்பட பிரமுகர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொள்வர். (க-9)

### கொடிகாமம் வைத்தியசாலையில்

# 7 ஆயிரத்து 264 பேருக்கு மலேரியா

# கடந்த ஆண்டு மட்டும் சிகிச்சை

(தென்மராட்சி)

கொடிகாமம் அரசினர் வைத்தியசாலையில் கடந்த வருடம் 7 ஆயிரத்து 264 பேருக்கு மலேரியா நோய்க்கான சிகிச்சை அளிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இவற்றில் 6 ஆயிரத்து 786 பேருக்கு இரத்தப் பரிசோதனை மூலம் சாதாரண மலேரியா நோய் என கண்டறியப்பட்டதாக இவ் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியான டாக்டர் பி. வி. தம்பித்துரை எமது செய்தியாளரிடம் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் இவ்வைத்தியசாலையில் 108 பேருக்கு மூளை மலேரியா நோய்க்கான ஆரம்ப சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

மேலும் கொடிகாமம் அரசினர் வைத்தியசாலையில் கடந்த வருடத்தில் வெளி நோயாளர் பிரிவில் 51 ஆயிரத்து 223 பேர் சிகிச்சைக்காகப் பார்வையிடப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

இவை தவிர மருத்துவ சிகிச்சைக் களங்களில் 5 ஆயிரத்து 218 பேர் பார்வையிடப்பட்டதாகவும் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி பிரதேச செயலர்பிரிவில்கொடிகாமம், மிருசுவில், எழுதுமட்டுவாழ், கெற்பெலி போன்ற கிராமங்களில் தான் பெரும்பாலானவர்கள் மலேரியா நோயினால் பீடிக்கப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது. (க-77)

### மத்திய செயற் குழுகூட்டத்தில்

## தவிர்க்க முடியாத காரணத்தால் ஜோசப் எம். பி. பங்குபற்றவில்லை

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற போது தவிர்க்கமுடியாத காரணத்தினாலேயே கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கலந்து கொள்ளவில்லையென கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் வீ. ஆனந்த சங்கரி நேற்று வலம்புரிக்குத் தெரிவித்தார். [ந]

### கிளிநொச்சியில் தொடரும்

## இராணுவ நடவடிக்கையினால் 20 ஆயிரம் மாணவர்கள் பாதிப்பு

(வவுனியா)

கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக 20,000 மாணவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதுடன் 34 பாடசாலைகள் முற்றாக அழிந்துள்ளதாகவும் வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றனர்.

கரைச்சி, கண்டாவளைக் கோட்டங்களில் 21 பாடசாலைகளும் பூநகரிக் கோட்டத்தில் 9 பாடசாலைகளும் பளைக் கோட்டத்தில் 4 பாடசாலைகளும் முற்றாக அழிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மேற்படி கிளிநொச்சி மாவட்டத்தில் 20,000 மாணவர்கள் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆசிரியர்களும் ஒரு உதவிக் கல்விப்பணிப்பாளரும் உயிரிழந்துள்ளனர். 2 ஆசிரியர்கள் கற்பிக்க முடியாத அளவு ஊனமுற்றுள்ளனர் என்றும் அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (4)

## வன்னியிலிருந்து வவுனியா செல்வோர் மீண்டும் திரும்பமுடியாத அவலம்

(வவுனியா)

வன்னியிலிருந்து வவுனியா மன்னாருக்குச் செல்லும் பயணிகள் இனி வன்னிச்குத் திரும்ப முடியாதுஎன இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாகவே வன்னியிலிருந்து மக்களை அனுமதிப்பது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இனி வவுனியா மன்னார் செல்வோர்வன்னிக்குத் திரும்ப முடியாத நிலையில் அவர்கள் அகதிகள் என்ற பெயரில் நலன்புரி நிலையங்களில் தடுத்து வைக்கப்படுகிறார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இளவாலையில் கசிப்பு ஒழிப்பு முயற்சியில் ஈடுபடும் பங்குத் தந்தை

(இளவாலை)

இளவாலைப் பகுதியில் கசிப்பு உற்பத்தியை ஒழிக்கும் முயற்சியில் இளவாலை பங்குத் தந்தை அருட்திரு அன்ரனிபாலா முன் மாதிரியாகச் செயற்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அவ்வூர் இளைஞர்கள் உதவியுடன் கசிப்பு உற்பத்தி செய்வதாக கருதப்படும் வீடுகளுக்குச் சென்று எச்சரிக்கைகள் விடுத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவோர் ஆலய பங்கில் இருந்தும் ஆலய வழிபாட்டில் இருந்தும் நீக்கப்படுவதுடன் சேமக்காலையிலும் இடம் அனுமதிக்கப் படமாட்டாது என எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இதே வேளை சகாயபுரம், உயரப்புலம் போன்ற பகுதிகளில் இளைஞர் குழுக்களின் முயற்சியால் கசிப்பு உற்பத்தி முற்றாகவே நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-12)

## போக்குவரத்து சேவை இல்லாததால் மந்துவில் பகுதி மக்கள் பாதிப்பு

(மந்துவில்)

மந்துவில், தாவளை, இயற்றாலைப் பகுதி மக்கள் வடமராட்சி, சாவகச்சேரி போன்ற இடங்களுக்குப் போக்குவரத்துச் செய்வதற்கு பேரூந்து சேவை இல்லாததால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

குன்றும் குழியுமாகக் காணப்பட்ட இப் பகுதி வீதிகள் திருத்தம் செய்யப்பட்ட போதிலும் பேரூந்து சேவை இல்லாமையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்விற்கு முந்திய காலத்தில் பருத்தித்துறை டிப்போ 754 இலக்க பேரூந்து இப் பகுதிச் சேவையிலீடுபட்டது குறிப்பிடத்தக்கது. (க-39)

## மீளக் குடியமர்வு

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக சுமார் 18 ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தங்கி இருக்கின்றன.

வெள்ளம் படிப்படியாக வற்றி வருவதால் அவர்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்புகின்றனர் இவர்களுக்கான வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கோப்பாயில் புதுவகை திருட்டு

(கோப்பாய்)

கோப்பாய்ப்பகுதியில் புதுவகையிலான திருட்டுக்கள் இடம்பெற்று வருவதாகதெரிவிக்கப்படுகிறது.

கசிப்புக் கலந்தஅரிசியை கோழிகளுக்கு போடுவதன் மூலம் மயக்கமடைந்த நிலையில் கோழிகள் இரவு வேளைகளில் திருடப்பட்டு வருவதாக பொதுமக்கள் தரப்பில் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வகையான திருட்டுக்களில் அண்மையில் ஈடுபட்ட கும்பல் ஒன்று கோப்பாயில் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு நையப் புடைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (க)

## சேதமடைந்த நிலையில் பந்துகள்

(தென்மராட்சி)

யுனிசெவ் நிறுவத்தினால் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள, தெரிவு செய்யப்பட்ட முன் பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட பெரிய பிளாஸ்ரிக் பந்துகள் சேதமடைந்த நிலையில் இருப்பதால் முன்பள்ளிச் சிறார்களுக்குப் பயன்படாது என முன்பள்ளி ஆசிரியர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கு 120 பந்துகள் வழங்கப்பட்டதாகவும், அவ்வப் பகுதி கிராம சேவையாளர்களின் சிபார்சுக் கடிதத்துடனேயே அப்பந்துகள் வழங்கப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

ஒரு முன் பள்ளிக்கு தலா இரண்டு பந்துகள் வீதம் வழங்கப்பட்டதாகவும் அறியப் படுகின்றது.

சான்றவர் சான்றாண்மை குன்றின் இரு நிலந்தான்
தாங்காது மன்னோ பொறை.
- குறள்

# வலம்புரி

## வைத்திய நாதர்கள் தினம்

இந்த மண்ணின் இரு கண்கள் வைத்தியர்களும், ஆசிரியர்களுமாகும். ஒருவர் உடல் நலப்பாதுகாவலர். மற்றையவர் உளநலப் பாதுகாவலர். உறுதியான உடலும் உளமுமே வாழ்வின் வனப்பை அடைய வழி வகுப்பன. ஆசிரியர்களைக் கௌரவிக்கவென அக்டோபர் ஆறு அமைந்துள்ளது. அவ்வாறு வைத்தியர்களைக் கௌரவிக்க ஒரு தினம் அமைவது சாலப் பொருத்தமே.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பர் அறிவுடையோர். எங்கள் தில்லைக் கூத்தனுக்கும் வைத்திய நாதன் என்று ஒரு பெயருண்டு. ஓவாப் பிணி பற்றி வள்ளுவன் குறிப்பிட்டுள்ளான். நாட்டின் வரைவிலக்கணம் கூற வந்த போது உறுபசி ஓவாப் பிணி செறுபகை சேராத் தொண்டு என நாவூறுகின்ற பான்மை சிந்திக்க வேண்டியதே.

வைத்தியப் பணி மகிமை பொருந்தியது. அப்பணி மேற்கொள்வோர் நிலமகள் போன்ற பொறுமையும், பிறர் தமர் பாரா பேராண்மையும் கொண்டு விளங்க வேண்டும். அமைதிப் பிளம்பாய், அன்பின் உறைவிடமாய், அறிவின் பேரூற்றாய் மகுடமாக தியாக சிந்தையினராய் விளங்க வேண்டும்.

இந்தச் சிந்தனை ஊற்றெடுக்கும் இவ் வேளையில் கூட்டுறவாளர் தசாவதானி சரவண முத்து ஆறுமுகம் நினைவுக்குழுவின் நினைப்பும் - செயற்பட விழையும் போக்கையும் நோக்க வேண்டும். கூட்டுறவு நாட்டுயர்வு என்பர். அதுவும் வைத்தியசாலைகள் ஆக்கத்திற்கு கூட்டுறவு என்றால் மக்கள் சார்பாக, நோயினால் துவளும் மெலியாரின் சார்பாக வரவேற்க வேண்டியதொன்றே.

ஞானமும் கல்வியும் நயந்து நானிலம் புரக்கும் நல்லோர் சிந்தனைகள் ஏற்க வேண்டியதொன்றே. வையதும் பயனுற வாழ்பவர்கள், வாழ்ந்தவர்கள் வாழ்த்தப்பட வேண்டியவர்கள்; போற்றப்பட வேண்டியவர்களே, தசாவதானி சரவணமுத்து ஆறுமுகத்தின் உள்ளத்தின் உயர்ந்த உணர்வுக்கும் நோய் தீர்த்து மக்களைப் புரக்கும் வைத்தியர்க்கும் ஒரு சிறிய இடம் செப்பனிட வேண்டிய தேவை ஒன்று இருக்கின்றது.

- அன்புடன் ஆசிரியர்

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள்

## வினா இல. 04

சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

அன்புள்ள அம்மா .........

நான் சுகமே உள்ளேன். உன்சுகம் வேண்டித் தொழுகின்றேன் கடல் கடந்து வாழும் எனக்கு உன் நினைவே பாதுகாப்பு. மேலும் ...........

(1) மேலே சொல்லப்பட்ட வாக்கியங்கள் எங்கிருந்து பெறப்பட்டிருக்கலாம்?
(1) தொலைபேசி (2) கடிதம் (3) தந்தி

(2) இவ்வாக்கியத்தோடு தொடர்புடையவர் வாழ்வது?
(1) உள்நாடு (2) வெளிநாடு (3) கடலில்

(3) 'நினைவு' என்னும் சொல்லின் எதிர்ப்பொருள் தரும் சொல்?
(1) ஞாபகம் (2) பதிவு (3) மறதி

(4) இலங்கையின் ஆதிக்குடிகள்?
(1) இயக்கர் (2) ஆங்கிலேயர் (3) ஒல்லாந்தர்

(5) மரமொன்றில் எப்போதும் இருப்பது?
(1) பூ (2) வேர் (3) காய்

(6) சாமாதானப் பறவை?
(1) கிளி (2) கழுகு (3) புறா

(7) நான்கிற்கு பதினாறு அமைவது போல் பத்துக்கு?
(1) ஐம்பது (2) நூறு (3) இருபது

(8) உமது அயல் வீட்டில் ஷெல் விழுந்து அங்குள்ளவர்களுக்கு காயம் ஏற்பட்டு அவர்கள் குளறுகின்றார்கள். இது உமக்குக் கேட்கிறது உமது வீட்டில் தொலை பேசியும் உண்டு, உடனடியாக நீர் என்ன செய்வீர்?
(1) நீரும் அவர்கள் எல்லோருடனும்சேர்ந்துகுய்யோ முறையோ எனக் குளறி அயலவர் எல்லோரையும் அழைப்பீர்
(2) அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல் சொல்லுவீர்
(3) உடனடியாக அயலில் உள்ள வைத்தியசாலை அம்புலன்ஸிற்கு தொலை பேசியில் தகவல் கொடுப்பீர்

(9) 500 கிராம் சீனி ரூபா 15. 50 எனின் 1750கிராம் சீனியின் விலை?
(1) ரூபா 54.25 (2) ரூபா 46.50 (3) ரூபா 31

(10) சூரியன் கிழக்கே உதிக்கும் என்னும் நிகழ்வு?
(1) எப்போதும் நிகழும் (2) சிலவேளை நிகழும்
(3) ஒருபோதும் நிகழாது

**கீழ்வரும் வினாக்களுக்குரிய விடைகளை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

(11) 'கல்வியேநிலையான செல்வம்' இவ்வாக்கியத்தை அமைக்கும் அதிக தடவை பயன் படுத்தப்பட்டுள்ள எழுத்து எது?

.........................................................................

(12) சேர்த்தெழுதுக:- பூ —|— இதழ் ...........

(13) பிரித்தெழுதுக:- கரும்பலகை ..................

(14) **SS** என்பதால் 66 உம் **RR** என்பதால் 33 உம் குறிக்கப்படின் **SR** என்பதால் குறிக்கப்படும்எண்எது?

.........................................................................

(15) 5 முதல் 7 வரையான எண்களைப்பயன்படுத்தி ஆகக் கூடிய மிகப் பெரிய எண் எது?

.........................................................................

(16) 'தியத்வைர்' இவ் வாழ்த்துக்களை ஒழுங்கு பண்ணுவதன் மூலம் பெறப்படும் கருத்துடைய சொல்லை எழுதுக? ..........................................

(17) 5 கிலோகிராம் 250 கிராம் என்பதை சரியான குறியீட்டுடன் எழுதுக?

| | | | |
|---|---|---|---|
| 10 | 5 | 6 | |
| 23 | 4 | 7 | 3 |

இக்கூட்டினை அவதானித்து விடைஎழுதுக.

(18) இப்பெட்டியுள் காணப்படும் இரட்டை எண்களை எழுதுக? ..........................................

(19) இப் பெட்டியுள் காணப்படும் ஒற்றை எண்களின் எண்ணிக்கையை எழுதுக? ..........................

(20) நான் ஒரு எண்ணை நினைக்கின்றேன் அதனை இரண்டில் பெருக்கி வரும் விடையுடன் 5 இனைக் கூட்ட பெறப்படும் விடை 35 ஆகும் நான் நினைத்த எண் யாது? ..........................................

**கோலத்தை அவதானித்து அடுத்து வரவேண்டிய எண்ணை எழுதுக.**

(21) 5, 10, 15, 20 ..............................
(22) 30, 27, 24, 21 ..............................
(23) 1, 3, 5, 7 ..............................
(24) 2, 4, 6, 8 ..............................
(25) 10, 20, 30, 40 ..............................

**கீழ்வரும் கூற்றுக்கள் சரியாயின் (ச) எனவும் தவறாயின் (த) எனவும் எதிரேஉள்ள அடைப்பினுள் எழுதுக.**

(26) தாவரங்கள் உயிருள்ளவை ஆகும் ( )
(27) நான்முகி ஒன்றிற்கு எண்முகங்கள் ( )
(28) காட்டில் வாழும் மக்கள் வேடுவர் என அழைக்கப்படுவர் ( )
(29) உடல் வெப்பமானியை கொண்டு மனித உடலின் வெப்பநிலையை அளக்கலாம் ( )
(30) தாவரங்கள் அழிக்கப்படுதல் பல வகையிலும் தீமையை உருவாக்கும் ( )

ஆக்கம்- சுந்தர்

## புலமைப் பரீட்சை வினாஇல - 3விடைகள்

(1) R (2) W (3) R (4) மனைவி
(5) பன்றி (6) 10 லீற்றர் [7] 20 (8) அகவிடம்
(9) நீர் (10) 1.0 (11) சதம்இரண்டு
(12) சிவப்பு (13) நாய் (14) குளோரின்
(15) கொழும்பு (16) சுத்தியல் (17) ஞாயிறு
(18) ஐந்து (19) பூனை (20) பிளேற்

## வினா இல. 03

அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம்

(01) த. விதுர்ஷா, சரஸ்வதி கனிஸ்ட வித்தியாலயம்.
(02) பு. லக்ஷிகா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
(03) சு. அபிராமி, பளை மத்திய கல்லூரி.
(04) ஆ. சஞ்ஜியா, நாகர்கோவில் மகாவித்தியாலயம்.
(05) கோ. கிருஷாந்தி, இணுவில் மத்திய கல்லூரி.
(06) பா. மயூரிகா, கோ. தெற்கு றோ.க.த.க. பாடசாலை.
(07) த. தக்சனா, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
(08) சி. கோபிநாத், சுதுமலை சிந்மய பாரதி மகாவித்தியாலயம்.
(09) இ. மீதிலா, சென்யோன் பொஸ்கோ.
(10) கு. பகீரதன், திருநெல்வேலி இந்து தமிழ்கலவன் பாடசாலை.
(11) யோ. கம்ஷன், பரியோவான் கல்லூரி.
(12) அ. ஜீவிதன், ஏழாலை தெற்கு அ.மி.த.க. வித்தியாலயம்.
(13) சு. ரதீபா. புனித இசிதோர் றோ.க.த.க. பாடசாலை.
(14) ஜெ. கிஷாளினி, பளை மத்திய கல்லூரி.
(15) றொ. பவிதா, ஸ்ரீ.பார்வதி வித்தியாலயம்.
(16) யோ. தர்ஷிக்கா, இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
(17) ச. நூர்ஜிதா, பளை மத்திய கல்லூரி.
(18) ச. சறங்கா, நீர்வேலி சீ.சீ.த.க. பாடசாலை.
(19) இ. சுஜிதா, புனித இசிதோர றோ.க.த.க. பாடசாலை.
(20) பா. செந்தூரன், பரியோவான் கல்லூரி.
(21) சி. சிவறஞ்சினி, தா.இ.த.க. பாடசாலை.
(22) இ. கரன், சுழிபுரம் ஐக்கிய அங்க சைவ வித்தியாசாலை.
(23) மு. கஜனி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
(24) ந. சுஜீவன், மாணிக்கவாசகர் வித்தியாசாலை.
(25) தே. ரேவதன், திருநெல்வேலி இ.த.க. பாடசாலை.
(26) தெ. பரந்தாமன், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.
(27) சி. விஜேந்தினி, கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.
(28) சி. சுகதீபன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(29) சு. செந்தூரன், சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
(30) ச. யனோசியா, திரு. இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.
(31) க. சசிதாஸ், பளை மத்திய கல்லூரி.
(32) க. கபிலன், சீ.சீ.த.க. பாடசாலை.
(33) இ. மதுசூதனன், இணுவில் இந்துக் கல்லூரி.
(34) த. டனிஹம்சானந், புனித யோன் பொஸ்கோ.
(35) அ. நாகராசா, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(36) சி. டினேசன், உடுவில் மகளிர் கல்லூரி.
(37) சி. சதாசிவம், ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்.

### கல்விப்பகுதி வினா இல. 04

"வலம்புரி"
இல, 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

---

மாணவர் முழுப்பெயர்: ..........................................

சொந்த முகவரி: ..........................................

கற்கும் பாடசாலை: ..........................................

மாணவர் கையொப்பம்: ..........................................

---

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளை தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

# சாய்ந்தமருது உ. பிரதேசசெயலக காசோலைகள் திரும்பிவிட்டன

## நிதியின்மையே காரணம்

(ஏறாவூர்)

அம்பாறை மாவட்டத்தில் வன்செயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடமைப்பு மானியமாக சாய்ந்த மருது உபபிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட காசோலைகள், பிரதேச செயலக கணக்கில் நிதியின்மை காரணமாகத் திரும்பி விடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் வீடொன்றிற்கு தலா 25 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதுண்டு. இதன் பிரகாரம் சாய்ந்த மருதுப் பிரதேசத்தில் 500 பேருக்கு இக் கொடுப்பனவு வழங்கப்பட பெயர்பட்டியல் தயாரிக்கப்பட்டு முதலாம் கட்டக் கொடுப்பனவாக ரூபா 10 ஆயிரத்திற்கான காசோலைகள் 260 பேருக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில் பெருந்தொகையான காசோலைகள் திரும்பியதை அடுத்து பிரதேச செயலகத்தில் ''கொடுப்பனவுகள் நிறுத்தம்'' செய்யப்பட்டுள்ளதாக வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க)

# வன்னியில் இருந்து வவுனியாவரும் அகதிகள் எண்ணிக்கை அதிகரிப்பு

(வவுனியா)

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னியில் இருந்து தினமும் அகதிகள் பெருமளவில் வவுனியா வந்த வண்ணமுள்ளனர்.

இவர்களை ''சனச'' தற்காலிக முகாமிலும் பூந்தோட்ட நலன்புரி நிலையத்திலும் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவர்கள் அனைவருக்கும் சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகிறது.

தினமும் அகதிகள் வருகை அதிகரித்து வருவதனால் இவர்களை நலன்புரி நிலையங்களில் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகளை வவுனியா மாவட்ட செயலக அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை மட்டும் 368 பேர் வவுனியா வந்து சேர்ந்துள்ளனர். இதுவரை வன்னியில் இருந்து சுமார் 1460 அகதிகள் வவுனியா வந்து சேர்ந்திருப்பதாக செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் வவுனியாவுக்குள் வருவதற்கு மக்கள் மடுவில் காத்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## டிப்ளோமா பயிற்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மகளிர் குழுவினால் நடாத்தப்படும் மனையியல் டிப்ளோமா பயிற்சி வகுப்புஇன்று காலை 9.30 மணிக்கு யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மகளிர் குழுத் தலைவி ரதி சோதிலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்வைபவத்தில் யாழ்.மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் பெ.கனகசபாபதி, மாவட்டச் செயலாளர் அ.சிவசுப்பிரமணியம் ஆகியோர்கலந்து கொள்கிறார்கள். (வ)

## யாழ்ப்பாணத்தில் 1 லீ. ம. எ. 18.45சதம் 1லீற்றர் டீசல் 24.55 சதம்

(யாழ்ப்பாணம்)

அரசு அறிவித்திருந்த எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் ஒரு லீற்றர் மண்ணெய் 18-45 சதமாகவும், ஒருலீற்றர் டீசல் 24-55 சதமாகவும் நேற்று முதல் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணத்திற்கான இவ்விலை அதிகரிப்பை வட பிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது சகல எரிபொருள் விற்பனை முகவர்களுக்கும் அறிவித்திருப்பதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

## கட்டுநாயக்கா விமான நிலையப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்தின் பாதுகாப்பு பெருமளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுதந்திர தினமான கடந்த வெள்ளிக்கிழமை லண்டனுக்கும் புதுடில்லிக்கும் புறப்பட இருந்த ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ் விமானங்களில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக வந்த தொலைபேசித் தகவலையடுத்து அவ்விரு விமானங்களும் பரிசோதிக்கப்பட்டபோது அத்தகவல் பொய் எனத் தெரியவந்தது இதையடுத்தே விமான நிலையப்பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக விமான நிலைய பாதுகாப்பு பிரிவின் தலைவர் என். எம். மன்சூர் தெரிவித்தார்.

### செட்டி.-.

டுள்ளனர். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதென வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை காயமடைந்த இராணுவத்தினரை ஏற்றிச் சென்ற வாகனம் மீது மறைந்திருந்து தாக்கியதில் பஸ் வண்டி சிறிது சேதத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

### பஸ் குண்டு ---

தனால் இருவர் கொல்லப்பட்டதுடன் 18 பேர் காயமடைந்தனர். இதில் 6 பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்குண்டு வெடிப்புத் தொடர்பாக வத்தளைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அண்மைக் காலமாக கொழும்பில் இடம்பெற்று வரும் பஸ்குண்டு வெடிப்புகள் மக்கள் மத்தியில் பெரும் பயப்பீதியை உண்டுபண்ணியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### கப்பல்...

பதிவுசெய்யும் நடவடிக்கை சனிக்கிழமை தொடக்கம் இடம்பெறுவதாகதிருகோணமலை பிரதேச செயலாளர் வ, வேலும் மயிலும் தெரிவித்துள்ளார்,

இம்மாதம் நடுப்பகுதியளவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான பயணிகள் சேவை இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள போதும் அதனை நிச்சயப்படுத்த முடியவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை லங்கா முடித்த கப்பல் தற்போது கொழும்புத்துறைமுகத்தில் நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4

### ஊரெழு..

நீதிபதி இ.த. விக்கினராஜா சாட்சியை அழைத்து விசாரித்தபோது குணம் என்பவர்ஆயுதத்துடன் கைது செய்யப்பட்டதுதொடர்பான விசாரணை செய்த போதுகுணத்திடம் இருந்து ஆயுதம்எடுக்கப்படவில்லை என்று புலனாய்வு உத்தியோகத்தர் நீதிமன்றில் தெரிவித்ததை அடுத்து பொய் சாட்சியத்தினால் தீர்ப்பு கூறமுடியாதிருப்பதாகவும் இது தொடர்பாக சட்டமா அதிபருக்கும் பிரதம நீதியரசருக்கும் எழுதி அவர்களுடைய ஆலோசனையின் பின் நடவடிக்கை எடுப்பதாகக்கூறி எதிரியை இரண்டு கிழமைபாதுகாப்பில் வைத்திருக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்,

## வி. கே. ஜெகனின் கன்னிப் பேச்சு இன்று பாராளுமன்றத்தில் இடம்பெறும்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக அண்மையில் நியமிக்கப்பட்ட வி. கே. ஜெகனின் பாராளுமன்றக் கன்னிப்பேச்சு இன்று இடம் பெறவுள்ளது.

இப் பாராளுமன்ற உரையின் போது காணாமல் போனோர் விடயம் கடற்றொழிலாளர் பிரச்சினை யாழ்ப்பாணத்து விவசாயப் பொருட்களை கொழும்பிற்கு அனுப்புதல் போன்ற பல்வேறு விடயங்களை முன் வைத்து அவர் உரையாற்றுவார் எனத்தெரியவருகிறது.

## யாழ். செயலகத்தில் நிர்வாகசேவை வெற்றிடங்கள் நிரப்பப்படும்

[கொழும்பு]

யாழ்ப்பாணம் செயலகத்தில் காலியாகவுள்ள 22அரச நிர்வாக சேவை வெற்றிடங்களுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான அங்கீகாரத்தை நேற்று நடைபெற்ற அரச அதிபர்களின் மாநாட்டில் அமைச்சர் வழங்கினார்,

இவ்வெற்றிடங்களுக்கு அரச நிர்வாக சேவையில் இருந்து ஓய்வுபெற்றவர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கவும் அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது [வ]

## உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குள் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதி ஆட்டங்கள் இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும்.

இன்றைய அரை இறுதி ஆட்டங்களில் கிறீன் கிங்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாடு மீன் விளையாட்டுக் கழகமும் சென் நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குருநகர் விளையாட்டுக் கழகமும் விளையாடுகின்றன. (4)

### பேச்சுவார்த்தையில்...

தலைக் கூட்டணி சார்பில் இரா. சம்பந்தன், ஆனந்த சங்கரி, முகுந்தன் ஆகியோரும் ஐ. தே. கட்சி மாற்று அணியைச் சேர்ந்த சரத் அமுனுகம நந்தாமத்யூ கம்யூனிஸ்ற் கட்சியைச் சேர்ந்த ராஜா கொலுகூரே, பட்டி வீரக்கோன், டி. யு. குணசேகரா, இ.தொ.கா. கட்சியைச் சேர்ந்த ஆர். யோகராஜன், எஸ். சதாசிவம், ஈ. பி. டி. பியைச் சேர்ந்தடக்ளஸ்தேவானந்தா டாக்டர் விக்னேஸ்வரன், தவராஜா, புளொட் சார்பில் த. சித்தார்த்தன், சதானந்தன் ஆகியோரும் ரெலோ சார்பில் என். சிறிகாந்தா, செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

### ஜனாதிபதி.--

டம் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் ஒற்றை ஆட்சியை குறிக்கும் சொற்பதம் சம்பந்தமாக கட்சிகள் குறை கூறவே இறுதியில் பிரிக்க முடியாத பிராந்தியங்களின் கூட்டமைப்பான இலங்கை இறைமையும் சுதந்திரமும் உள்ள குடியரசாக திகழும் என்ற பதம் இரு தரப்பாலும் ஏற்கப்பட்டது.

அத்துடன்இலங்கை பல்லின பல்மொழி பல் மத நாடாகத் திகழும் என்றவிடயம் அரசியல் அமைப்பில் 53ஆம் பிரிவில் சேர்க்கப்படின் அது தொடர்பான விடயங்கள் மீறப்படும் போது ஒருவர் நீதிமன்றம் செல்லமுடியாது என தமிழ் கட்சிகள் கூறி அதனை வலு உள்ள 6ஆம் பிரிவுக்கு மாற்றுமாறு கோரியதைத் தொடர்ந்து அரச தரப்பும் அதற்கு இணங்கியது.

மேலும் ஆளுநர் நியமனம் யாப்பின் முன்னுரைகொழும்பு நகரின் ஏகாதிபத்தியம் அடிப்படை உரிமைகள், தேர்தல் ஆணையாளர் நியமனம் போன்றவிடயங்களும் கலந்துரையாடப்பட்டுஅவற்றில்சிறிதளவுமுரண்பாடுகள் காணப்பட்டதாகவும் இம்முரண்பாடுகள் குறித்தும் வடக்குக் கிழக்கு இணைப்பு காணி சம்பந்தமான பிரச்சினைகள் குறித்தும் 10, 15, 22ஆகிய திகதி களில் நடைபெறும் கலந்துரையாடல்களில பேசப்படும் எனவும் தமிழ்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை மேற்படி கலந்துரையாடல்களில் காணப்பட்ட முரண்பாடுகள் குறித்து தமிழ்க் கட்சிகளிடம் தனித்தனியாக ஆலோசனைகள் தருமாறு கோரப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (வ-4)

### அன்பு மாணவச்...

அதன் முதற்கட்டமாக க.பொ.த. உயர்தர மாணவர்களினதும், போட்டிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்களின் நன்மை கருதியும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் வலம்புரியில் ''பொது அறிவு'' இடம் பெறும்.

மாறிவரும் உலகில் நீங்களும் உங்கள் அறிவுப் புலத்தைப் பெருக்க வேண்டாமா? இன்றே வலம்புரியின் பிரதிகளுக்கு முந்துங்கள். (ஆ-ர்)

### யாழ் அரசியல்---

அன்ரனிதாஸ் [வயது 23] ஆகிய இருவருமே நீதிமன்றத்தில் ஒப்படைக்கப் பட்டவர்களாவர்.

மல்லாகம் நீதிமன்ற நீதவான் இ. த. விக்கினராஜா அவர்கள் இருவரையும் திருமலை நீதிமன்றத்தில் மார்ச் 7ம் திகதி ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்,

திருகோணமலை நீதிமன்றில் ஒப்படைக்கும் வரை யாழ்ப்பாணத்தில் 15 நாள் வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார் (வ]

### மூன்று வார---

னர்.

இந்தப் பயணிகள் தைப் பொங்கல் தினத்தில் இருந்து வவுனியா வருவதற்கு மடு, தம்பனை, ஆகிய இடங்களில் காத்திருந்த பின்பே வவுனியா வர அனுமதிக்கப் பட்டார்களெனத் தெரியவருகிறது,

இவர்களுடன் வந்த இன்னொரு தொகுதியினர் மன்னாருக்குச் சென்றதாகவும் அறிவிக்கப்படுகிறது.(வ 103)

உ

சிவமயம்

திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருஷம் தை மாதம் 27 ஆம் நாள் (10.02.2000) வியாழக்கிழமை காலை 7.05 மணி முதல் 10.15 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

| எமது புத்திரன் திருநிறைச் செல்வன் **யோகாநந்தன்** (யோகா கிறீம் கவுஸ், மந்திகை) அவர்களுக்கும் | ★★★★★★★ | எமது புத்திரி திருநிறைச் செல்வி **சைலஜா** அவர்களுக்கும் |
|---|---|---|

செல்வச்சந்நிதி ஆலயத்தில் திருமாங்கல்யதாரணம் நடாத்தத் திருவருள் பாலித்துள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம். தங்கள் நல்வரவை நாடும்

**திரு. திருமதி சின்னையா**
பழவத்தை, வியாபாரி மூலை,
பருத்தித்துறை.

**திரு. திருமதி பாலசுந்தரமூர்த்தி**
மட்டுவில்,
சாவகச்சேரி.

(இரு வீட்டார் அழைப்பு) (கி/71)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000- ஆண்டு பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.